## வரந்தரும் பெருமாள் அப்பை (வரதராஜ தேசிகர்)
## வாழி திருநாமம்

எத்திசையும் பாஷியத்தை எடுத்துரைப்போன் வாழியே
எங்கள் இளையவில்லி என்றேத்துமவன் வாழியே
முத்தி தரு மாறன் மொழி முயன்றுரைப்போன் வாழியே
முதுகாவணி அவிட்டம் முன்புதித்தான் வாழியே
பத்தியுடன் வரயோகி பதம் பணிவோன் வாழியே
பதின்மர் கலை உட்பொருளைப் பகருமவன் வாழியே
அத்திகிரி வாழும் அண்ணல் அருளுடையோன் வாழியே
அன்புடனே வரந்தருவார் அடியிணைகள் வாழியே

---